

செங்கல்பட்டு மாவட்டம், புனித தோமையார் மலை ஊராட்சி ஒன்றியம், அகரம் தென் ஊராட்சியில் ரூ.79.79 இலட்சத்தில் புதியதாக கட்டப்பட்டுள்ள கலைஞர் சமுதாய நல கூட்டத்தினை கழகப் பொருளாளர் நாடாளுமன்ற உறுப்பினர் டி.ஆர்.பாலு, குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் ஆகியோர் பொதுமக்களின் பயன்பாட்டிற்காக திறந்து வைத்தார்கள். அருகில் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.அருண்ராஜ், சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ்.ஆர்.ராஜா, இ.கருணாநிதி, மேயர் க.வசந்தகுமாரி, துணை மேயர் கோ.காமராஜ், பகுதிச் செயலாளர் த.ஜெயக்குமார், ஒன்றியச் செயலாளர் ஜி.கே.ரவி ஆகியோர் உள்ளனர்.

### விளையாட்டு உபகரணங்களை வழங்கிட வருகை தரும்

# அமைச்சர் உதயநிதி ஸ்டாலினுக்கு செங்கல்பட்டில் உற்சாக வரவேற்பு!

### மாவட்டச் செயலாளர் - அமைச்சர் தா.மோ.அன்பரசன் வேண்டுகோள்!

காஞ்சிபுரம்,மார்ச்.14-

காஞ்சிபுரம் செங்கல்பட்டு மாவட்ட விளையாட்டு வீரர்களுக்கு விளையாட்டு உபகரணங்களை வழங்கிட செங்கல்பட்டிற்கு இன்று 14ஆம் தேதி காலை வருகை தரும் கழக இளைஞர் அணி செயலாளர் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் முழுவதிலும் இருந்து கழகத்தினர் திரண்டு வந்து மாபெரும் உற்சாக வரவேற்பு அளித்திட வேண்டும் என்று மாவட்டக் கழகச் செயலாளர் அமைச்சர் தா.மோ.அன்பரசன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.



காஞ்சிபுரம் செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ள விளையாட்டு வீரர்களுக்கு, கலைஞர் விளையாட்டு உபகரணங்கள் வழங்கும் திட்டத்தின் கீழ் விளையாட்டு உபகரணங்கள் வழங்கும் விழா செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகம் அருகில் இன்று காலை 10.00 மணியளவில் நடைபெறுகிறது.

இவ்விழாவில் கழக இளைஞர் அணி செயலாளர் மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்து கொண்டு, செங்கல்பட்டு காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள விளையாட்டு வீரர்களுக்கு விளையாட்டு உபகரணங்களை வழங்கி சிறப்புரையாற்றுகிறார்.

செங்கல்பட்டு மாநகரில் இன்று காலை நடைபெறும் இந்த இனிய விழாவிற்கு வருகை தரும் மாண்புமிகு இளைய தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகம் அருகில் பாண்டு வாத்தியம் மேள தாளம் முழங்க பிரம்மாண்டமான முறையில் எழுச்சியான வரவேற்பு அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த வரவேற்பில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் உள்ள மாவட்ட மாநகர பகுதி ஒன்றிய நகர பேரூர் கழக நிர்வாகிகள் தலைமை செயற்குழு பொதுக்குழு உறுப்பினர்கள், கழக அணிகளின் நிர்வாகிகள், கழக செயல் வீரர்கள் உள்ளிட்ட அனைவரும் தமது கரங்களில் கழகத்தின் இருவண்ணக்கொடியை ஏந்தி பல்லாயிரக்கணக்கில் அணி திரண்டு வந்து பங்கேற்க வேண்டும் என்று மாவட்டத்தில் உள்ள கழகத்தினர் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றேன்.

இந்த வரவேற்பில் கலந்து கொள்வது "நமது உரிமை""நமது கடமை" என்ற அந்த உணர்வோடு கழகத்தினர் அனைவரும் தங்கள் கரங்களில் வரவேற்பு பதாகைகளை ஏந்தி நின்று உற்சாக வரவேற்பு அளிக்க வேண்டும் என்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் கூறியுள்ளார்.

### நாள்தோறும் பல மணி நேரம் உழைத்துக் கொண்டிருக்கும்

# தாய்மார்களுக்கு ரூ.1000 வழங்குவதைக் கொச்சைப் படுத்துவதா?

### கழக மகளிர் அணி கண்டனம்!

சென்னை, மார்ச் 14-

தாய்மார்களுக்கு 1000 ரூபாய் பிச்சைப் போட்டா வாக்கு அளித்து விடுவார்களா என்று மகளிர் உரிமைத்தொகையை இழிவுப் படுத்தி பேசிய குஷ்புவுக்கு தி.மு.க. மகளிர் அணி, தி.மு.க. மகளிர் தொண்டர் அணி கண்டனம் தெரிவித்துள்ளது.

இது குறித்து மகளிர் அணிச் செயலாளர் ஜெ.ஹெலன்டேவிட்சன், மகளிர் தொண்டர் அணிச் செயலாளர் நாமக்கல் ப. இராணி ஆகியோர் கூட்டாக விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

ஒவ்வொரு பெண்ணும் ஆணின் வெற்றிக்காகவும் அவரவர் குழந்தைகளின் கல்வி, உடல் நலம் காக்கவும் இந்த சமூகத்திற்காகவும், வீட்டிலும் வெளியிலும் ஒரு நாளைக்கு பலமணி நேரம் பெண்கள் உழைத்துக் கொண்டு இருக்கிறார்கள். பெண்களின் உழைப்பை முறையாக அங்கீகரித்திடவே பெண்களுக்கு திராவிட முன்னேற்ற கழக அரசு சொத்துரிமை வழங்கி, கல்வியிலும், வேலை வாய்ப்பிலும், உள்ளாட்சி அமைப்புகளிலும் இட ஒதுக்கீடு அளித்து பெண் உரிமை போற்றிட கலைஞர் அவர்களின் பெயரால் மகளிர் உரிமைத் தொகை திட்டம் ரூபாய் 1000 கடந்த வருடம் செப்டம்பர் மாதம் மூலம் தமிழ்நாடு முழுவதும் 1 கோடியே 18 இலட்சம் மகளிருக்கு வழங்கப்பட்டு வருகிறது. எனவேதான் இத்திட்டத்திற்கு மகளிருக்கான உதவித்தொகை என்று இல்லாமல் மகளிர் உரிமைதொகை என்று பெயரிட்டு வழங்கப் படுகிறது.

எளிய மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் மாதம்தோறும் வழங்கப்படும் கலைஞர் உரிமை தொகையை தாய்மார்க்கு 1000 பிச்சை போட்டா வாக்கு அளித்து விடுவார்களா என்று பிச்சைகாரர்களுக்கு ஒப்பிட்டு தமிழக மகளிர்களை அவமதிக்கும் வகையில் பேசியிருக்கும் பா.ஜ.க. மத்திய செயற்குழு உறுப்பினர் குஷ்புவுக்கு மகளிர் உரிமைத்தொகை எத்தனை தாய்மார்களுக்கு வீட்டுச் செலவு, வீட்டு வாடகை, மருத்துவச்செலவு என்று பயன்படுகிறது தெரியுமா? தமிழக மகளிரை இழிவு படுத்தி பேசிய குஷ்புவை திமுக மகளிர் அணி தி.மு.க. மகளிர் தொண்டர் அணி வன்மையாக கண்டிக்கிறது. தமிழக மகளிர்கள் பாராளுமன்ற தேர்தலிலே திமுகவுக்கு ஆதரவு வாக்குகள் அளித்து தமிழகத்திலிருந்து பி.ஜே.பி.யை விரட்டி அடித்து பாடம் புகட்டுவார்கள்.

இவ்வாறு அவர்கள் விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளன.

### ஜி.துக்காராம் பங்கேற்பு! ஜெ.ராஜேஷ்குமார் ஏற்பாட்டில்

# சென்னை வடகிழக்கு மாவட்ட மருத்துவ அணி சார்பில் நல உதவிகள்!

### டாக்டர் பார்த்தசாரதி - டாக்டர் என்.எம்.பி. கோபால் வழங்கினர்!

சென்னை, மார்ச் 14-

சென்னை வடகிழக்கு மாவட்டம் தி.மு.க. மருத்துவ அணி சார்பில் 24வட்டம் புழல் பகுதியில், மாவட்டச் செயலாளர் மாதவரம். எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ.,மருத்துவ அணி தலைவர் டாக்டர் கனிமொழி சோமு எம்.பி.,செயலாளர். டாக்டர் எழிலன் நாகநாதன் எம்.எல்.ஏ. ஆகியோர்ஆலோசனைப்படி, மாவட்ட துணைத்தலைவர் மருந்தாக்குனர். புழல். ஜெ.ராஜேஷ் குமார் ஏற்பாட்டில், முதல்வர் அவர்களின் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு, கழககொடி ஏற்றி , இனிப்பு மற்றும் கேக் வழங்கி, ஆதறவற்றோர், முதியவர்கள் மற்றும் பகுதி மக்கள் சுமார் 200 பேருக்கு அறுசுவை உணவு வழங்கி சிறப்புடன் கொண்டாடப்பட்டது.

விழாவிற்கு செல்வராஜ், அந்தோணி, அரசு. வழக்கறிஞர் கௌதமன், கே.பி.அன்பரசு,கழகமுத்து,சேகர்கருணாகரன்,தமிழ்செல்வம்,பாலாஜி. குபேரன், சிவா,சுரேஷ்,மெட்ரோ ராஜன், மோகன், சாமிநாதன் முன்னிலை வகித்தனர்.

இவ்விழாவில் மருத்துவ அணி மாவட்ட தலைவர் டாக்டர் பார்த்தசாரதி , மாவட்ட அமைப்பாளர் டாக்டர் என்.எம்.டி. கோபால் துரைசாமி, துணைத் தலைவர் குணசேகரன், பகுதிச் செயலாளர் துக்காராம், வட்டச் செயலாளர். கே.பி.சுந்தரேசன், அவைதலைவர். சி.ஜெ.ரவி ஆகியோர் பங்கேற்று சிறப்பித்தனர்.



வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர். கலாநிதி வீராசாமி தொடர் முயற்சியால் வடசென்னை நாடாளுமன்ற தொகுதியில் அமைந்துள்ள சென்னை துறைமுகம் நிறுவனத்திடமிருந்து (CSR) சமூக பொறுப்பு நிதி மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சியின் நமக்கு நாமே திட்டம் மூலமாக பெற்ற நிதியையும் இணைத்து ரூபாய் 2 கோடி பெற்று ஆர்.கே. நகரில் உள்ள அன்னை சந்தியா நகரில் மெயின் தெருவில், மண்டலம் 04, வார்டு 38 யில் 3பல்நோக்கு கட்டிடம் மற்றும் உள்ளரங்க விளையாட்டு ஷட்டில் கோர்ட் கட்டுமான பணிகளுக்கு வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர். கலாநிதி வீராசாமி அடிக்கல் நாட்டி துவக்கி வைத்தார். மேலும் இந்நிகழ்வில் சென்னை வடக்கு மாவட்டக் கழகச் பொறுப்பாளர் ஆர்.டி. சேகர் எம்.எல்.ஏ ,ஆர்.கே.நகர் சட்டமன்ற உறுப்பினர் ஜே.ஜே.எபினேசர் ஆர்.கே.நகர் மேற்கு பகுதி செயலாளர் ஜெபதாஸ் பாண்டியன்,ஆர்.கே.நகர் கிழக்கு பகுதி செயலாளர் இரா. லட்சுமணன்,4 வது மண்டலக் குழுத் தலைவர் நேதாஜி யு. கணேசன் எம்.சி. , 38அ வட்டக் கழக செயலாளர் எல். சண்முகசுந்தரம், ஆர்.கே.நகர் பொறுப்பாளர் நந்தனம் நம்பிராஜன், கழக நிர்வாகிகள், மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் அவர்கள் பொள்ளாச்சி ஆச்சிப்பட்டியில் நடைபெற்ற அரசுவிழாவில் கோயம்புத்தூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை வளாகத்தில் ஜப்பான் பன்னாட்டு நிதியுதவியுடன் பன்னடுக்கு மருத்துவமனை கட்டடத்தை நேற்று (13.03.2024) திறந்துவைத்ததை தொடர்ந்து, கோயம்புத்தூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் புதியதாக திறந்து வைக்கப்பட்ட கட்டடத்தை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன் நேரில் பார்வையிட்டார். அருகில் தமிழ்நாடு சுகாதார திட்டத்தின் திட்ட இயக்குநர் எம்.கோவிந்த ராவ், மற்றும் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை முதல்வர் மரு.நிர்மலா, மாமன்ற உறுப்பினர் திருமதி. சுமா உட்பட பலர் உள்ளனர்

### கோவையில் - பன்னாட்டு நிதியுதவியுடன் பல அடுக்கு மருத்துவமனை கட்டடம்!

# பொள்ளாச்சியில் முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!

### காணொலி வாயிலாக - அமைச்சர் மா.சுப்பிரமணியன் பங்கேற்பு!

சென்னை, மார்ச் 14 -

முதலமைச்சர் அவர்கள் பொள்ளாச்சி ஆச்சிப்பட்டியில் நடைபெற்ற அரசுவிழாவில் கோயம்புத்தூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை வளாகத்தில் ஜப்பான் பன்னாட்டு நிதியுதவியுடன் பன்னடுக்கு மருத்துவமனை கட்டடத்தை திறந்துவைத்த போது, கோயம் புத்தூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையிலிருந்து காணொலிக் காட்சி வாயிலாக மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேரலையில் கலந்து கொண்டார்.

அதனைத் தொடர்ந்து, 300 படுக்கை வசதிகளுடன், அறுவை சிகிச்சை அரங்குகள் மற்றும் நவீன ஆய்வகங்கள் கொண்ட பன்னடுக்கு மருத்துவ மனையை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன் அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

தொடர்ந்து, அமைச்சர் மா.சுப்பிரமணியன் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது,

முதலமைச்சர் அவர்களால் கோயம்புத்தூர், ஈரோடு, திருப்பூர், நீலகிரி ஆகிய நான்கு மாவட்டங்களில் பல்வேறு துறைகளின் சார்பில் ரூ.1273.51 கோடி மதிப்பீட்டில் முடிவுற்ற திட்டப்பணிகளை தொடங்கி வைத்து, புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல்நாட்டப் பட்டுள்ளது. மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையிலிருந்து ஏராளமான முடிவுற்ற திட்டப்பணிகள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளன. புதிய பணிகளும் தொடங்கி வைக்கப்பட்டுள்ளன.

கோயம்புத்தூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் ரூ.12 கோடி மதிப்பில் PETCT SCAN திறந்து வைக்கப்பட்டது. இந்த ஆட்சி பொறுப்பேற்பதற்கு முன்புவரை தமிழ்நாட்டில் புற்றுநோயை துல்லியமாக கண்டறியும்வகையில், 2 இடங்களில் மட்டுமே இந்த ஸ்கேன் கருவி இருந்தது. இந்தஆட்சி பொறுப்பேற்ற பிறகு, கோயம்புத்தூர், சேலம், திருநெல்வேலி, தஞ்சாவூர், காஞ்சிபுரம் PETCT SCAN திறந்து வைக்கப்பட்டு பயன்பாட்டில் இருந்து வருகின்றன. 26 கட்டண அறைகள் பயன்பாட்டில் இருந்து வருகின்றது. ரூ.1000, ரூ.3000, ரூ.3500 என்ற மூன்று விதமாக கட்டண அறைகள் உள்ளன. மேலும், இந்த மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமையின் நிதி ஆதரத்தில் ரூ.287.56 கோடி மதிப்பீட்டில், 2,21,922 சதுரஅடி பரப்பளவில் பிரமாண்ட மருத்துவமனை கட்டடம் முதலமைச்சர் அவர்களால் பொள்ளாச்சியிலிருந்து காணொலி காட்சி வாயிலாக திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இங்கு 100 தீவிர சிகிச்சை படுக்கைகளுடன் 300 படுக்கை வசதிகள், 10 அறுவை சிகிச்சை அரங்குகள் மற்றும் நவீன ஆய்வகங்கள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும், எம்.ஆர்.ஐ ஸ்கேன், சி.டி ஸ்கேன், நானோ ஸ்கேன், டிஜிட்டல் எக்ஸ்ரே, எண்டோஸ்கோபி, உள்ளிட்ட பல்வேறு அதிநவீன தொழில்நுட்ப கருவிகள் பயன்பாட்டிற்கு வந்துள்ளன.

மேலும், கோயம்புத்தூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் ரூ.2.20 கோடி மதிப்பீட்டில் நவீன உபகரணங்களுடன் கூடிய கூடுதல் நீராவி சலவையகம் கட்டடம், நீலகிரி மாவட்டம், பந்தியூர் அரசு மருத்துவமனை, ஈரோடு மாவட்டம் அந்தியூர் அரசு மருத்துவமனை ஆகிய இடங்களிலும் தலா ரூ.5கோடி மதிப்பீட்டில் புதிய கூடுதல் கட்டடங்கள், என மொத்தம் ரூ.12.20 கோடி மதிப்பீட்டில் புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது.

மழைக்காலங்களில் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையின் வளாகத்தில் தண்ணீர் தேங்குவது நீண்ட கால பிரச்சனையாக இருந்தது. இப்பிரச்சனை குறித்து தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டது, இன்று நடைபெற்ற அரசுவிழாவில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பல்வேறு முக்கிய அறிவிப்புகளை வெளியிட்டார்கள். அதிலும், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அறிவிப்பில், கோயம்புத்தூர், அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில மழைநீர் வடிகால் மற்றும் கான்கிரீட் சாலை ரூ.10கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும். என தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவிப்பினை அறிவித்துள்ளார்.

மேலும், திருப்பூர் மாவட்டத்தில் பல்லடம் அரசு மருத்துவமனை வளாகத்தில் ரூ.4 கோடி மதிப்பீட்டில் புதிதாக விபத்து மற்றும் எலும்பு முறிவு சிறப்பு மருத்துவமனையும், நீலகிரி மாவட்டத்தில் அரசு துணை சுகாதார நிலையங்களுக்கு தலா ரூ.50 இலட்சம் செலவில் மொத்தம் ரூ.2.5கோடி மதிப்பீட்டில் புதிய கட்டடங்கள் அமைக்கப்படும். என முதலமைச்சர் என்ற அறிவிப்பினை அறிவித்துள்ளார்.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

### பூவிருந்தவல்லி நகராட்சியில்

# ரூ. 10 கோடி மதிப்பில் திட்டப்பணிகள்!

### ஆ.கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார்!

திருவள்ளூர் மார்ச் 14;

திருவள்ளூர் மாவட்டம் பூவிருந்தவல்லி சட்டமன்றத் தொகுதிகுட்பட்ட பூவிருந்தவல்லி நகராட்சிக்கு உட்பட்ட பல்வேறு பகுதிகளில் ரூ.10 கோடி மதிப்பிலான நிறைவடைந்த பணிகள் மற்றும் புதிய திட்டப் பணிகளை மாநில ஆதிதிராவிட நலக்குழு செயலாளர் ஆ. கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார்.

பூவிருந்தவல்லி நகராட்சியில் 9, 11, 12, 4, 16, 18, 19 ஆகிய வார்டுகளில் நடைபெற்ற நிகழ்ச்சிகளுக்கு நகர் மன்ற தலைவர் காஞ்சனா சுதாகர் தலைமை தாங்கினார். நகர செயலாளர் திருமலை வரவேற்றார்.

நகர மன்ற துணைத் தலைவர் க.ஸ்ரீதர், நகராட்சி ஆணையர் லதா, மாவட்ட பிரதிநிதி லயன் சுதாகர் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இந்த நிகழ்ச்சிகளில் ஆ.கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ. பூந்தமல்லி நகராட்சி பொது நிதி மற்றும் சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியில் இருந்து ரூ.10 கோடி மதிப்பிலான முடிவடைந்த பணிகளை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு தொடங்கி வைத்து, புதிய பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார்.

இதில் பூந்தமல்லி நகராட்சிக்குட்பட்ட ருக்மணி நகர் உள்ளிட்ட மூன்று இடங்களில் ரூ 7.52 கோடி மதிப்பில் புதிய சாலைகள் மற்றும் சாலை சீரமைப்பு பணிகள் துவக்கம் நடைபெற்றது. மேலும் ரூ.88 லட்சம் மதிப்பில் கண்காணிப்பு கேமரா, ரூ.95.5 லட்சம் மதிப்பில் சமுதாயக் கூடம், ரூ.9.90 லட்சம் மதிப்பில் தியானம் மையம், ரூ.12 லட்சம் மதிப்பில் புதிய அங்கன்வாடி மையம் கட்டடம், ரூ.49 லட்சம் மதிப்பில் பகவதி குளம் சீரமைப்பு உள்ளிட்ட மொத்தம் ரூ.10.07 கோடி மதிப்பிலான நிறைவடைந்த பணிகள் மற்றும் புதிய திட்டப் பணிகளுக்கான அடிக்கல் நாட்டப்பட்டது.

இந்த நிகழ்ச்சியில் எச்.தாஜுதீன், துரைபாஸ்கர், அப்பர்ஸ்டாலின், டில்லி ராணி மலர் மண்ணன், எஸ். அசோக்குமார், லயன் ஜெ.சுதாகர், ப.அன்ழபகன், இரா.புன்னியக்கோட்டி, சௌந்தரராஜன்,

கவுன்சிலர்கள் செந்தாமரை நெல்சன், தங்கம் திருமலை, ராஜகுரு, திபாயுவராஜ், ஜேம்ஸ், வட்ட செயலாளர்கள் நெல்சன், பழனி, யுவராஜ், சத்தியா, சரவணன், மற்றும் நகராட்சி அதிகாரிகள், நகர் மன்ற உறுப்பினர்கள், கழக நிர்வாகிகள் உள்பட பலர் கலந்து கொண்டனர்கள் .




சென்னை மெட்ரோ இரயில் நிறுவன (CMRL) அரங்கில் நேற்று (13.03.2024) தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் சார்பில் சமூக நலன் மகளிர் உரிமைத் துறை அமைச்சர் திருமதி பி. கீதா ஜீவன் மீனவ சமுதாய இளைஞர்களுக்கு உயர் திறன் பயிற்சியினை தொடங்கி வைத்து சேர்க்கை விண்ணப்பங்களை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் அரசு முதன்மைச் செயலாளர் / மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை ஆணையர் சுன்சோங்கம் ஜடக் சிரு, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை செயலாளர் திருமதி ஜெயஸ்ரீ முரளீதரன், சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை அரசு செயலாளர் மருத்துவர் தரேஸ் அகமது, தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழக மேலாண்மை இயக்குநர் திருமதி ஜெ. இன்னசென்ட் திவ்யா, சமூக பாதுகாப்புத்துறை ஆணையர் அமர் குஷாவா, நான் முதல்வன் திட்ட முதன்மை செயல் அலுவலர் ஜெயபிரகாசம் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.